**செய்தி வெளியீடு எண்:160** **நாள்: 21.02.2011.**

**இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.**

**புதுப்பிக்கப்பட்ட ஆணையர் அலுவலகம் திறந்து வைத்தல், திருக்கோயில் பணியாளர் மகன்/மகளுக்கு மடிக்கணினி (Lap Top), உயர்கல்வி கட்டணம் நிதியுதவி வழங்குதல் மற்றும் அமைச்சுப் பணி இளநிலை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணை வழங்குதல்.**

இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அலுவலகத்தில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட ஆணையர் அலுவலக கட்டடத்தினை இன்று (21.02.2011) நடைபெற்ற விழாவில் **மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்** திறந்து வைத்தார்.

இவ்விழாவில் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்வி பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகளுக்கு, அவர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் 54 மாணவியர்களுக்கும், 56 மாணவர்களுக்கும் ஆக மொத்தம் 110 மாணவர்களுக்கு ரூ. 35 இலட்சம் மதிப்பில் **மடிக்கணினிகளும்,** அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பட்டப்படிப்பில் **(Professional Courses)** சேர்ந்து பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன்/ மகள் 5 மாணவர்களுக்கு முதலாம் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 25 சதவிகிதத் தொகையாக ரூ.25,630/– நிதியுதவியும், இந்து சமய அறநிலையத்துறையில் அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்திட தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 47 இளநிலை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் ஆகியவற்றை **மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் வழங்கினார்.**

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர், திரு ரா. சிவகுமார், இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை, ஆணையாளர், திரு ப.ரா.சம்பத், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்தறை அலுவலர்கள், செயல் அலுவலர்கள், திருக்கோயில் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**